பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

01 10 2025 WEDNESDAY 6.30 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பருப்பு வகைகள் உற்பத்தியில் தன்னிறைவை எட்டுவதற்கான இயக்கத்திற்கு 11 ஆயிரத்து 400 கோடி ரூபாய் வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு, கடந்த ஜூலை ஒன்றாம் தேதி முதல் 3 சதவீத கூடுதல் அகவிலைப்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

3. தமிழக காவல்துறையில் மதுவிலக்கு அமலாக்கப் பணியில் சிறப்பாக செயல்பட்ட 5 காவலர்களுக்கு காந்தியடிகள் காவலர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

4. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த இரண்டு நாட்களுக்கு ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Rohan Kapoor – Ruthvika Shivani Gadde இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

வரும் ஐந்தாண்டுகளில் பருப்பு வகைகள் உற்பத்தியில், தன்னிறைவை எட்டுவதற்கான இயக்கத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், 2030-31ஆம் ஆண்டுக்குள் பருப்பு வகைகளின் உற்பத்தியை 350 லட்சம் டன்னாக உயர்த்தும் நோக்கில், அதன் உற்பத்திக்கான தன்னிறைவு இயக்கத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்த இலக்கை எட்டுவதற்கு, 11 ஆயிரத்து, 400 கோடி ரூபாய் முதலீடு செய்யவும் அனுமதி அளிக்கப்பட்டது.

பருப்பு உற்பத்திக்கான சுயசார்பு இயக்கத்தின் மூலம். 2 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு தரமான விதைகள் அறுவடைக்குப் பின் கொள்முதல் செய்வதற்கான கட்டமைப்பை உருவாக்கும் பணிகளும் இந்த இயக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

புதிய நவீன ரக பருப்பு வகைகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக 88 லட்சம் இலவச விதைப் பை-களை வழங்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

அறுவடைக்குப் பின் இழப்பு ஏற்படுவதை தடுப்பதற்காக ஆயிரம் பதப்படுத்தும் தொழிற்சாலைகளை நிறுவும் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

துவரை, உளுந்து, மசூர் ஆகிய பருப்பு வகைகளை விவசாயிகளிடமிருந்து, வரும் நான்காண்டுகளுக்கு, குறைந்தபட்ச ஆதரவு விலையில் 100 சதவீதம் கொள்முதல் செய்யும் பணியும் இந்த இயக்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

2026-27ஆம் ஆண்டு சந்தைப் பருவத்தில், குறிப்பிட்ட ராபி பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துவதற்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

சூரியகாந்தி குவிண்டாலுக்கு 600 ரூபாயும், மசூர் பருப்பிற்கு குவிண்டாலுக்கு 300 ரூபாய் வழங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு, கடந்த ஜூலை மாதம் ஒன்றாம் தேதி முதல் 3 சதவீதம் கூடுதல் அகவிலைப்படி வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதனையடுத்து, அகவிலைப்படி 55 சதவீதத்திலிருந்து 58 சதவீதமாக உயர்கிறது.

இந்த அறிவிப்பால், 49 லட்சத்து 19 ஆயிரம் மத்திய அரசு ஊழியர்களும், 68 லட்சத்து 72 ஆயிரம் ஓய்வூதியதாரர்களும் பயன்பெறுவர்.

இதனால் அரசுக்கு, ஆண்டொன்றுக்கு சுமார் 10 ஆயிரத்து 84 கோடி ரூபாய் கூடுதல் செலவீனம் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நாடுமுழுவதும் 57 புதிய கேந்திரிய வித்யாலய பள்ளிகளை திறப்பதற்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

இக்கூட்டத்திற்குப் பின், செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இதற்கென 5 ஆயிரத்து 862 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இதுவரை, கேந்திரிய வித்யாலய பள்ளிகள் இல்லாத மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில். அம்மாவட்டங்களில் 20 கேந்திரிய வித்யாலய பள்ளிகள் தொடங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

புதிதாக 57 கேந்திரிய வித்யாலய பள்ளிகள் தொடங்குவதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை வரவேற்பதாக கூறியுள்ள தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், நாட்டின் ஒட்டுமொத்த கல்வித்தரத்தை உயர்த்தும் முயற்சி இது என்று பாராட்டியுள்ளார்.

>>>>><<<<<

சென்னை, ராஜாஅண்ணாமலைபுரத்தில் உள்ள மேம்படுத்தப்பட்ட தொல்காப்பிய பூங்காவை விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இன்று காலை இந்த பூங்காவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளை பார்வையிட்ட பின், மக்களின் முழுப் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

இந்த பூங்காவில் பார்வையாளர் மாடம், நடைபாதை, சிற்றுண்டியகம், திறந்தவெளி அரங்கம், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பகுதி உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் சார்பில் இந்த தொல்காப்பிய பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தமிழக காவல்துறையில் மதுவிலக்கு அமலாக்கப் பணியில் சிறப்பாக செயல்பட்ட 5 காவலர்களுக்கு காந்தியடிகள் காவலர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரத்தைச் சேர்ந்த திரு. ப. நடராஜன், திரு. சத்யநாதன், சின்னசேலத்தைச் சேர்ந்த திரு. மணிகண்டன், கடலூர் மாவட்டம், புத்தூரைச் சேர்ந்த திரு. க. நடராஜன், சேலத்தைச் சேர்ந்த திரு. கண்ணன் ஆகியோருக்கு இந்த விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

வரும் ஜனவரி மாதம் 26ஆம் தேதி, குடியரசு தினத்தன்று இந்த விருதுகள், 40 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுடன் வழங்கப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உலக பிரசித்தி பெற்ற தூத்துக்குடி மாவட்டம், குலசேகரப்பட்டிணம் முத்தாரம்மன் கோவில் தசரா திருவிழாவின் முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் நாளை நடைபெறவுள்ளது.

இதற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

7-வது புத்தக திருவிழா  தருமபுரியில் நடைபெற்று வருகிறது.

வரும் 5 ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த புத்தக திருவிழாவை காண்பதற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏராளமான மாணவ மாணவிகள் வந்து செல்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த இரண்டு நாட்களுக்கு ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருக்குறள் முற்றோதல் போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள், தமிழ் வளர்ச்சித்துறை இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் பிரசித்தி பெற்ற முத்தாரம்மன் திருக்கோவில் பூக்குழி திருவிழா இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

>>>>><<<<<

சேலம், செவ்வாய்ப்பேட்டை பகுதியில் 2 ஆயிரம் கிலோ போதைப்பொருளை காரில் கடத்திச் சென்ற 3 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Rohan Kapoor – Ruthvika Shivani Gadde இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-14, 21-12 என்ற செசட்கணக்கில் Vimalraj Annadurai – Shreya Balaji இணையை வென்றது.

>>>>>END<<<<<